J.M.C


# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 37 பிரசோற்பத்தி மார்கழி 19 03 01 1992 வெள்ளி


கேணல் சரத்முனசிங்க சொல்கிறார்

## வட, கிழக்கில் இராணுவம் தொடர்ந்தும் நடவடிக்கை

வடக்குக் கிழக்குப் பகுதியில் தொடர்ந்தும் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என இராணுவப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை முற்றாக ஒழிக்கும் வரை இராணுவ நடவடிக்கைகள் தொடரும் என அவர் நேற்று முன்தினம் குறிப்பிட்டதாக கொழும்பு பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்குக் கிழக்குப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் தொடரும் என ஏற்கனவே ஸ்ரீலங்கா முப்படைத்தளபதிகளும் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

★ கண்டியில் ஜனாதிபதி பிரேமதாஸ

# தனிநபர்கள் மூலம் இனப்பிரச்சினை தீர்வைக் கண்டுவிட முடியாது!

## எல்லாத் தரப்பினரின் இணக்கம் அவசியமானது

"அனைத்து இன மக்களினதும் பொதுவான இணக்கத்தின் கீழேயே வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் எந்த ஒரு தனி நபரும் அல்லது தனிப்பட்ட ஸ்தாபனமும் இப்பிரச்சினைக்கு ஒரு தலைப்பட்ச தீர்வை காணமுடியாது." இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று கண்டி தலதாமாளிகையின் எண்கோண மண்டபத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியாக பதவி ஏற்று மூன்றாண்டு நிறைவை முன்னிட்டு கண்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஜனாதிபதி "இனப்பிரச்சினைக்கு எல்லாத் தரப்பு ஆலோசனையையும் பெறவே பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது"

"இத்தெரிவிக்குழு ஒரு பொது இணக்க அடிப்படையிலான திட்டத்தை சமர்ப்பிக்கும் என நம்புகிறேன்" எனக்குறிப்பிட்ட அவர், வடக்குக் கிழக்கில் வன்முறைகள் தோல்வியடைந்து விட்டன எனவும் சொன்னார்.

"பல தமிழ் குழுக்கள் அரசியல் கட்சிகளாகியுள்ளன. இவை வடக்கு கிழக்கில் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் ஒத்துழைக்கின்றனர்.

உள்நாட்டுப் போரினால் படையினரும் அப்பாவிப் பொதுமக்களும் வீணே பலியாகின்றனர். வடக்கு கிழக்குப் பிரச்சினைத் தீர்வுக்கு இலங்கையின் ஒருமைப்பாட்டைப் பேணுவதாகவே அமையும்.

சிக்கலான இப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதன் மூலமே முழு நாட்டிலும் அமைதி ஏற்பட்டு விட்டதாக நாம் கருதமுடியும்" என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## வீரச்சாவு

திருமலை சூரன்கல் பகுதியில் படையினர் மறைந்திருந்து தாக்கியதில் சின்னவன் அல்லது இடைகாடன் (மூ சிவரத்தினம் திருமலை) வீரச்சாவு அடைந்தார்.

## ரொயோட்டா வானில் வந்தார் ஜனாதிபதி!

ஜனாதிபதியாக பதவிஏற்று மூன்றாண்டு நிறைவு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக கண்டிக்கு நேற்று முன்தினம் ஜனாதிபதி வந்துசேர்ந்தார்.

எனினும் அவர் கண்டி தலதா மாளிகைக்கு சாதாரண 'ரொயோட்டா வான்' ஒன்றிலேயே வந்து சேர்ந்தார்.

ஜனாதிபதிக்கு முன்பாக பிரதமர் டி.பி விஜேதுங்க வெள்ளை நிற பென்ஸ் காரில் வந்து இறங்கினார்.

ஜனாதிபதி பிரேமதாஸ வானில் வந்தமை பாதுகாப்பைக் கருத்திற் கொண்டும் தாம் ஆடம்பரமற்றவர் எனக் காட்டிக் கொள்ளவுமே எனக்கூறப்படுகிறது.

## தமிழக தனிநாட்டுக் கோரிக்கை மீண்டும் தலை தூக்கலாம்!

காவிரி நீர் பங்கீடு தொடர்பாக எழுந்த வன்முறைகளினால் இந்தியாவிலேயே தமக்கு பாதுகாப்பில்லை என்பது தமிழ் நாட்டில் தற்போது உணரப்படுவதாக இந்தியப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

இத்தகைய நிச்சயமற்றதன்மைகளினால் தமிழ் நாட்டில் மீண்டும் தனிநாட்டு கோரிக்கைகள் தலை தூக்கலாம் எனவும் அப்பத்திரிகைகள் சுட்டிக்காட்டியுள்ளன.

## யாழ். மாவட்ட பாடசாலைகளின் முதலாம் தவணை ஆரம்பம் குழப்பநிலை

யாழ் மாவட்டத்தில் சில பாடசாலைகள் முன்னர் அறிவிக்கப்பட்டபடி நேற்று 2 ஆம் திகதி ஆரம்பமாகின. ஆனால் சில பாடசாலைகளுக்கு மாணவர்கள் சென்றும் அவை ஆரம்பமாகாததால் ஏமாற்றத்துடன் திரும்பிவந்ததையும் காணமுடிந்தது. பாடசாலைகளின் முதலாம் தவணை ஆரம்பமாகும் சரியான திகதி தமக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் அதிபர்கள் தெரிவிக்கின்றனர். கல்விச் சேவைகள் பிரதி ஆணையாளர் ஜனவரி 2 ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவித்திருந்தார் யாழ்ப்பாண கல்விப் பகுதியினர் இது குறித்து அறிவிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது 18

## அமைதியான ஹர்த்தால்

கர்நாடகத்தில் தமிழ் நாட்டவர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைகளைக் கண்டித்து நேற்றுத் தமிழகத்தில் நடைபெற்ற ஹர்த்தால் அமைதியாக நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

## தேர்தல் சட்டமூலம் நிறைவேறியது

சுயேட்சை வேட்பாளர் இறப்பினும் அத்தொகுதியில் தேர்தலை ஒத்தி வைக்காது வாக்களிப்பை நடத்துவது என்ற சட்டமூலம் நேற்று இந்திய பாராளுமன்றத்தில் நிறைவேறியது.

அடுத்த மாதம் பஞ்சாபில் பொது தேர்தல்கள் நடைபெறவுள்ளமை தெரிந்ததே.

## தொற்று நோய்களினால் மடு முகாமில் 20 பேர் பலி

மடு அகதி முகாமில் தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட 20 பேர் பலியாகி மழையினாலும் சுகாதார வசதியீனங்களினாலுமே இம் மரணங்கள் ஏற்பட்டதாக

## பொலிஸ் அதிகாரி மீது கொலைக் குற்றச் சாட்டு

எப்பாவெலையைச் சேர்ந்த ஐந்து பெண்களைக் கொலை செய்ததாக பொலிஸ் இன்ஸ் நிலையப் பொறுப்பதிகாரியான இந்த இன்ஸ்பெக்டர் 24 வயதுடைய சந்திராவதி

## பேனைத் துப்பாக்கி

பேனை வடிவிலான சிறிய துப்பாக்கி ஒன்று பாவனைக்கு வந்துள்ளது. சுமார் 3 யார் தூரத்தில் உள்ள இலக்கை

— 04 ஆம் பக்கம் பார்க்க

மடு அருதி முகாமில் தொற்று நோயினால் பாதிக் கப்பட்ட 20 பேர் பலியாகி யுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

அப்பகுதியில் பெய்த கடும் மழையினாலும் சுகாதார வசதியீனங்களினாலுமே இம் மரணங்கள் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. பலியான 20 பேரினதும் சடலங்கள் அதி

— 04 ஆம் பக்கம் பார்க்க

எப்பாவெலையைச் சேர்ந்த ஐந்து பெண்களைக் கொலை செய்ததாக பொலிஸ் இன்ஸ் பெக்டர் ஒருவர் குற்றம் சாட் டப்பட்டு விசாரணைக்குப் படுத்தப் பட்டிருக்கிறார்.

எப்பாவெலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யான இந்த இன்ஸ்பெக்டர் 24 வயதுடைய சந்திராவதி யென்ற பெண்ணை வேறு சிலருடன் வீட்டிலிருந்த போது கடத்திச் சென்று காட்

— 04 ஆம் பக்கம் பார்க்க

வந்துள்ளது. சுமார் 3 யார் தூரத்தில் உள்ள இலக்கை

— 04 ஆம் பக்கம் பார்க்க

அடுத்த மாதம் பஞ்சாபி பில் பொது தேர்தல்கள் நடை பெறவுள்ளமை தெரிந்ததே.

### மன்னார் மாவட்டத்தில்

## பாடசாலைகளில இராணுவம் ஆசிரியருக்கு அரசு அழைப்பு

மன்னார் மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களை ஜன வரி மாதம் முதலாம் திகதி யன்று தத்தமது பாடசாலை களுக்கு சமுகமளிக்க வேண் டுமென அத்தியாவசிய சேவை கள் ஆணையாளர் பத்திரி கைகளுக்கு விடுத்த அறிக்கை யில் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்குரிய சம்பளங் இனிமேல் அந்தந்தப் பாட

— 04 ஆம் பக்கம் பார்க்க

## அரச ஊழியருக்கு இனிமேல் ஐந்து வருட முற்பணக்கடன்

அரசாங்க ஊழியர்கள் இனி மேல் 5 வருட கால முற் பணம் கடனாக பெறலாம் என பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

முன்னர் இரண்டு வருட கால முற்பணமே அரச ஊழி யர்கள் பெற்றுவந்தனர்.

இந்த முற்பணக்கடனுக்கு 7.2 வீத வட்டி அறவிடப் படும்எனவும் அறிவிக்கப்பட்டு ள்ளது.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கால்நடை பல்கலைக்கழகமும் ஜெயலலிதாவுக்கு டாக்டர் பட்டம்!

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு மற்றுமோர் பல்கலைக்கழகம் ஒன்றும் டாக்டர் பட்டம் அளிக்க முன்வந்துள்ளது. தமிழ்நாடு கால்நடை மருத் துவ பல்கலைக்கழகமே அது வாகும்.

ஜெயலலிதாவுக்கு சென்னை பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கியதைத் தொடர்ந்து மேலும் மூன்று பல்கலைக்கழகங்களும் அவ ருக்கு டாக்டர் பட்டம் வழங்க முன்வந்துள்ளனவாம் அவற்றில் கால்நடை மருத் துவ பல்கலைக்கழகம், எம். ஜி ஆர், பல்கலைக்கழகம், மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் என்பவையே அவை யாகும்.

# ஜனாதிபதியின் கண்டிக் கொண்டாட்டங்களுக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம்!

ஜனாதிபதி பிரேமதாஸ தனது மூன்றாண்டு கால ஜனாதிபதி ஆட்சி நிறைவை யொட்டி கண்டியில் மூன்று நாள் நடத்தும் கேளிக்கை நிகழ்ச்சிகளை எதிர்க்கட்சி கள் கண்டித்துள்ளன ஜனா திபதி இப்படியான கேளிக் கை நிகழ்ச்சிகளை நடத்து வதன் மூலம் பணத்தை வீணாக செலவு செய்கின் றார் இச்செலவுகள் அவர் தனது சொந்தசெல்வாக்கை அதிகரிக்கவே பயன்படும் என அவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர் இதே வேளை வடக்கு கிழக்கு போர் நீடித்து செல்லுமா னால் இராணுவச் செலவு பெரும் சுமையை ஏற்படுத் தும் என பி. பி. ஸிநேற்று குறிப்பிட்டது. இப்படியான இராணுவ செலவினத்தி னால் பிரேமதாஸ அரசு எதிர்பார்க்கும் பெருளா தார வளர்ச்சிகேள்விக்குறி யாகவேஇருப்பதாகமேலும் தெரிவிக்கப்பட்டது.

# நாகராஜனிடம் வாக்குமூலம் பெறப்பட்டது கலைஞரைக் களங்கப்படுத்த மட்டுமே!

## அவரைக் கைது செய்ய அது உதவாது - தமிழக பிரபல வழக்கறிஞர் கருத்து

"தமிழக முன்னாள் செயலாளர் நாகராஜன் திருச்சி மாஜிஸ்திரேட்டிடம் அளித்த 'வாக்குமூலம்' ஒப்புதல் வாக்குமூலம் இல்லையென்றால் கருணாநிதியைக் கைது செய்ய முடியாது. அது சட்டவிரோதச் செயலாகி விடும். அரசாங்கத்துக்கு அந்த நோக்கமிருந்திருந்தால் அவரை சூட்டோடு சூடாக உடனே கைது செய்திருக்க வேண்டுமே"

இவ்வாறு கருத்துத் தெரிவித்திருக்கிறார், தமிழகத்தின் பிரபல வழக்கறிஞர்களில் ஒருவரான பாளை சண்முகம்.

அடபோது இக்கருத்தைத் தமிழக வார இதழ் ஒன்று வெளியிட்டுள்ளது.

அவர் மேலும் கூறியுள்ளதாவது; "அரசு திட்டமிட்டுச் செய்தது என்ன? நாகராஜன் மாஜிஸ்திரேட்டிடம் கொடுத்த வாக்குமூலத்தை உடனே சினிமா நோட்டீசைப்போலப் பத்திரிகைகளுக்குக் கொடுத்து வெளியிடச் செய்தது.

குற்றம் சாட்டப்பட்டவரின் ஒப்புதல் வாக்குமூலத்தை இப்படிப் பத்திரிகைகளுக்கு வழங்குவதே நடைமுறை வழக்கம் அல்ல. வழக்கை விசாரிக்கும் அதிகாரி மாத்திரமே தனது விசாரணைக்கு உதவும் என்று கூறி மாஜிஸ்திரேட்டிடம் பெறலாம். வேறு எவருக்கும் கொடுப்பது குற்றம்.

பத்திரிகைகளில் வெளியிட்டது மாத்திரமன்றி, டி.வியிலும் இவ்வாக்குமூலம் அன்றே ஒளிபரப்பானது.

நாகராஜன் வாக்குமூலத்துக்குச் சட்டப்படி எந்த மரியாதையும் கிடையாது. ஆனால் அரசு அதையடுத்து 'விசாரணை' என்று எதுவும் இல்லாமல் மக்கள் மத்தியில் கருணாநிதியைக் களங்கப்படுத்தியாகி விட்டது.

அரசாங்கம் நினைத்தது இதுதான் போலும். அதைச் செவ்வனே செய்து முடித்து விட்டார்கள்".

இவ்வாறு பாளை சண்முகம் தெரிவித்துள்ளார்.

# தமிழர் பிரச்சினைக்குத்தீர்வுகாணத்தவறினால் நாடு இரண்டாகப் பிளவுபடும்!

### புதுவருடத்தன்று கண்டியில ஜனாதிபதி

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணாவிடில் நாடு பிளவுபடுவதைத் தடுக்க முடியாது என ஜனாதிபதி பிரேமதாசா கண்டியில் புதுவருடதினத்தன்று நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் தெரிவித்தார்.

வடக்குக் கிழக்கு தமிழ் பேசும் மக்களின் துயரங்களையும் சோதனைகளையும் புரிந்துகொண்டு அவர்களது தேவைகளையும், உரிமைகளையும் கொண்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத்தவறினால் நாடு பிளவுபடுவதைத் தடுக்க முடியாது என ஜனாதிபதி அங்கு எச்சரிக்கை விடுத்தார்.

சமாதான முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறோம் - வருவோம் எனவும் அங்கு தெரிவித்த ஜனாதிபதி எவ்வித நிர்ப்பந்தங்களுக்கும் தான் பணியப் போவதில்லையெனவும் மேலும் தெரிவித்தார்.

## இனப்பிரச்சினைத்தீர்வு உபகுழு பல குழுக்களாகப் பிரிகிறது!

இனப்பிரச்சினை தீர்வுக்கான பாராளுமன்ற தெரிவுக்குழு உபகுழுக்களாகப் பிரிந்து செயற்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

அதிகாரப் பரவலாக்கல், அரசியல் அடிப்படை, காணி, சட்டம் என வெவ்வேறு வகையான விடயங்களை இவ் உபகுழுக்கள் தனித்தனியாக ஆராயும்.

இம்மாதம் 10 ஆம் திகதி பாராளுமன்றத் தெரிவுக்குழு கூடும்போது இவ் உபகுழுக்களை நிறுவுவது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும்.

## செய்கை அதிகரிப்பு

வடமராட்சிப் பகுதியில் இம்முறை புகையிலைச் செய்கை அதிகரித்துள்ளது.

வெங்காயம் தேங்கியுள்ளதையடுத்து, புகையிலையைப் பயிரிடுவதில் அக்கறைகாட்டப்பட்டுள்ளது. (10)

## ஆயுர்வேத மருந்து உற்பத்தி சங்கானையில் ஆரம்பம்!

சங்கானை கலாசார மண்டபத்தில் ஆயுர்வேத மருந்து உற்பத்தி நிலையம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

இங்கு உற்பத்தி செய்யப்படும் மருந்து வகைகள் யாழ் மாவட்டத்திலுள்ள பிரதேச உப அலுவலகங்களின் நிர்வாகத்திலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளின் தேவைகளுக்கு பயன்படுத்தப்படுமென்று தெரிவிக்கப்படுகின்றது. (13)

## கிழக்காசிய விளையாட்டுப் போட்டி அடுத்த வருடம் நடைபெறும்!

கிழக்காசிய நாடுகளுக்கான விளையாட்டுப் போட்டி 1993-ல் நடைபெறவுள்ளது. இதற்கான தீர்மானம் ஆசிய ஒலிம்பிக் குழுவினால் அண்மையில் நிறைவேற்றப்பட்டது.

இக்குழுவில் சீனா, ஜப்பான், வடகொரியா, தென்கொரியா, மொங்கோலியா ஆகியன அங்கம்வகிக்கின்றன.

இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை இவ் விளையாட்டுப்போட்டி நடைபெறவுள்ளது. (22)

## அதிவேக ரோந்துப் படகுகள் கொழும்பில் தயாரிப்பு

கடற்படைக்குத் தேவையான அதிவேக விசைப்படகுகள் இலங்கையிலேயே தயாரிக்கப்படவுள்ளன.

சீனா, பிரான்ஸ் என்பவற்றின் உதவியுடன் கொழும்பு டொக்யார்ட் நிறுவனம் அவற்றை கொழும்பு கப்பல் கட்டும் தளத்தில் தயாரிக்கவுள்ளது.

# நிரந்தர அதிபர்கள் இல்லாமல் ஆயிரத்துக்கும் அதிகமான பாடசாலைகள்!

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பொன்றில் இலங்கையில் உள்ள பாடசாலைகளில் ஆயிரத்திற்கும் அதிகமான பாடசாலைகள் 1990 ஆம் ஆண்டில் நிரந்தர அதிபர்கள் இல்லாமல் இயங்கியுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த நிலைக்குக் காரணம், கடந்த வருடம் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட விசேட சலுகையைப் பயன் படுத்தி கணிசமான அனுபவமும் ஆற்றலும் மிக்க அதிபர்கள் ஓய்வு பெற்றமையே. சில பாடசாலைகள் தற்பொழுது தற்காலிக அதிபர்களின் கீழ் இயங்கி வருகின்றன.

நிரந்தர அதிபர்கள் இல்லாத பாடசாலைகளுக்கு நிரந்தர அதிபர்களை நியமிப்பதற்கான பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இருந்தும் இவர்களை நியமிப்பதில் சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதினால் இவ்வருடம் ஏப்ரல் மாதமளவில்தான் நிரந்தர அதிபர்கள் நியமிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (16)

## கைதிக்கும் கடவுச்சீட்டு மேலும் மூவர் கூண்டுக்குள்!

ஸ்ரீலங்காவில் கைதிகள் கூட கடவுச்சீட்டுகளை இலகுவாகப் பெற்றுக்கொள்கிறார்கள் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஜயவர்த்தனபுர பாராளுமன்றக் கட்டிடத்தைக் குண்டுவைத்துத் தகர்க்க எத்தனித்ததாகக் கைது செய்யப்பட்டுத் தற்பொழுது "மகசின்" சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர் ஒருவரின் பேரில் அவரின் சகோதரன் அண்மையில் கடவுச்சீட்டு ஒன்றைப் பெற்றுள்ளார்.

இந்த விடயம் ஏதோ ஒரு விதத்தில் அம்பலமாகவே கடவுச்சீட்டை எடுத்தவரும், அவருக்கு அனுசரணையாக இருந்ததாகக் கருதப்படும் கிராம சேவகரும், விண்ணப்பத்தை உறுதிப்படுத்திய சமாதான நீதவானும் கம்பஹா நீதிபதியினால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (16)

# ஊவா மாகாணத் தோட்டங்களில் ஆட்கணக்கெடுப்பு!

### தமிழர்களைக் 'கணக்கெடுக்க' பொலிஸ் நடாத்துகிறது

ஊவா மாகாணத்திலுள்ள தோட்டங்களில் புதிதாக ஆட்கணக்கெடுப்பொன்று நடாத்தப்படவுள்ளது.

தோட்ட நிர்வாகத்தின் உதவியுடன் பொலிஸார் இந்தக் கணக்கெடுப்பை நடாத்தவுள்ளனர்.

புதிதாகத் தோட்டப் பகுதிகளுக்கு வரும் தமிழர்களை அறியும் முகமாகவே இந்தக் 'கணக்கெடுப்பு' நடாத்தப்படுகிறதாம்.

மணவிடோ, சாவீடோ எதுவானாலும் ஊவாப் பகுதிக்கு பிற இடங்களிலிருந்து புதிதாக வரும் தமிழர்களைப் பற்றித் தமக்கு உடன் அறி

## பஞ்சாப்பில் கலவர நிலை; எனினும் தேர்தல் நடக்கும்

பஞ்சாப் மாநிலத்தில் தேர் ... படுகொலை செய்யப்பட்ட

## தலைமைப் பதவியை நோக்கி

## பவள விழா

தென்புலோலி புற்றளை

[illegible]

# எனினும் தேர்தல் நடக்கும்

பஞ்சாப் மாநிலத்தில் தேர்தலை நடத்தியே தீருவதென்று மத்திய அரசாங்கம் உறுதியுடன் இருப்பதாகப் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அங்கு தேர்தல் நடத்தப்பட்டால் கலவரங்கள் ஏற்படும் நிலை இருக்கத்தான் செய்கிறது. எனினும் எதிர் வரும் பெப்ரவரி மாதத்தில் தேர்தல் நடத்தப்பட்டே தீரும் என உள்துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

சமீபத்தில் அங்கு 57 ரயில் பயணிகள் தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்டதும் சுட்டிக் காட்டப்படுகிறது.

# ஆஸ்பத்திரியில் ஆசீர்வாதம்; தேரோக்கள் வழங்கினர்

கண்டி ஆஸ்பத்திரியில் பௌத்த தேரோக்களிடம் ஜனாதிபதி தம்பதி ஆசீர்வாதம் பெற்றனர்.

கண்டிக்கு விஜயம் செய்த ரணசிங்க பிரேமதாஸவும், திருமதி ஹேமா பிரேமதாஸவும் கண்டி ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவரும் அஸ்கிரிய பீடாதிபதியைச் சந்தித்தனர்.

அப்போதே அவர்களை அங்கிருந்த அஸ்கிரிய பீடத்தைச் சேர்ந்த தேரோக்கள் ஆசீர்வதித்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாகக் கண்டியில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதி பேசுகையில் "பௌத்த சங்கத்தின் போதனைகளுக்கு அரசு என்றும் செவிசாய்க்கும்" என்று சொன்னார்.

# 'ஈராக் இப்போது கடவுளையே நம்பியிருக்கிறது'

## ஜனாதிபதி சதாம்

"குவைத் நாட்டை ஈராக் ஆக்கிரமித்ததில் தவறு இல்லை. நட்புநாடுகள் அற்ற ஈராக் கடவுளையே தனது பலத்திற்கு நம்பியிருக்க வேண்டும்."

இவ்வாறு ஈராக் ஜனாதிபதி சதாம்ஹுசைன் தனதுசெய்தியில் தெரிவித்தார்.

ஐ.நா. வின் பொருளாதாரத்தடை தன்னை அடிபணிய வைக்கவில்லையென்றும் அச்செய்தியில் அவர் மேலும் கூறினார்.

எதுவானாலும் ஊவாப் பகுதிக்கு பிற இடங்களிலிருந்து புதிதாக வரும் தமிழர்களைப் பற்றித் தமக்கு உடன் அறிவிக்க வேண்டுமெனப் பொலிஸார் ஏற்கனவே உத்தரவிட்டுள்ளமை தெரிந்ததே.

னால் இவ்வருடம் ஏப்ரல

# தலைமைப் பதவியை நோக்கி முன்னேறுகிறார் சந்திரிகா

வைத்தியசாலையிலிருந்து தமது வாசஸ்தலத்திற்குத் திரும்பிய திருமதி சிறிமாவோ பண்டாரநாயக ஓய்வெடுத்து வரும் அதேவேளை அவரது மகள் சந்திரிகா குமாரணதுங்க சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையை அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் பொறுப்பேற்கும் வகையில் முன்னணியில் இருப்பதாக அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறிய வருவதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக, அனுரா பண்டாரநாயகவின் அரசியல் நடவடிக்கை சம்பந்தமாக மிகவும் கவலையடைந்துள்ளதாகவும், அதுவே அவர் நோய்வாய்ப்படக் காரணமாக இருந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

அனுரா பண்டாரநாயக தான் சுதந்திரக் கட்சியிலிருந்து விலகப் போவதில்லை என ஏற்கனவே தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில் சுதந்திரக் கட்சியில் அவர் நிலை என்னவாகும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

## பவள விழா

தென்புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தின் பவள விழாவும் பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளதாக வித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (11)

# ஒன்றல்ல இரண்டல்ல- அங்கு மோதிக்கொண்டன 4 பஸ்கள்!

நான்கு பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதின இலங்கையில் அல்ல சென்னையில்.

புதுவருடத் தினத்தன்று இடம்பெற்ற இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார், ஐந்துபேர் படுகாயமடைந்தனர்,

# பம்பாய் விஷ சாராயம்; பலியானோர் தொகை அதிகரிப்பு

பம்பாயில் விஷ சாராயம் அருந்தியதனால் இறந்தோரின் தொகை 84 ஆக அதிகரித்துள்ளது,

பலர் மயக்க நிலையிலிருப்பதனால் இத்தொகை மேலும் அதிகரிக்குமெனவும் அஞ்சப்படுகிறது.

● இடம் மாறிச் சென்றோரைப் 'பகடைக் காய்' களாக்கி

# யாழ் மருத்துவபீடத்தை இடமாற்ற கொழும்பில் தீவிர முயற்சி!

## யாழ் தரப்பு நியாயம் திட்டமிட்டு புறக்கணிப்பு

### வடக்கிற்குக் கிடைத்த வரப்பிரசாதம் பறிபோகுமா?

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தை யாழ்ப்பாணத்துக்கு வெளியே இடம் மாற்ற கொழும்பில் முயற்சியெடுக்கப்பட்டு வருவதாக அறியப்படுகின்றது

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற அனைத்து பல்கலைக்கழக உபவேந்தர்கள், வைத்தியத்துறைத் தலைவர்கள் பங்குபற்றிய கூட்டத்தில் இது குறித்து சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ் மருத்துவ பீடத்திலிருந்து இடம்மாறிச் சென்று தற்பொழுது தென்பகுதி பல்கலைக்கழகங்களில் கல்வியைத் தொடரும் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் தொடர்பாக எதிர்நோக்கப்படும் சில பிரச்சினைகளே, யாழ் மருத்துவ பீடத்தை இடமாற்றுவதற்குச் சாதகமான காரணங்களாகக் கொழும்பில் முன்வைக்கப்படுவதாகவும் அறியவருகிறது.

இத்திட்டமிட்ட செயலுக்கு இடம்மாறிச் சென்ற குறிப்பிட்ட சாராரின் உதவியும் பெறப்படுவதாகவும் சொல்லப்படுகின்றது.

யாழ் மருத்துவப் பிரிவுக்கு ஒதுக்கப்படும் நிதி மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்படுகிறது. இங்கு பதிவு செய்து கொண்ட மாணவர்கள் தெற்கிற்கு இடம் மாறிச் சென்றமையினால் நிதி ஒதுக்குவதில் ஏற்பட்டுள்ள நடைமுறைச் சிக்கல்களையும் இந்த இடமாற்ற முயற்சிக்கு ஒரு முக்கிய காரணமாகக் காட்டி கொழும்பில் முயற்சியெடுக்கப்படுகிறதாம்.

தற்போது யாழ் மருத்துவ பீட மாணவர், விரிவுரையாளர் தொடர்பாக எதிர்நோக்கும் சில சிக்கல்களுக்கான நடைமுறைச் சாத்தியமான பரிகாரங்கள் இங்கிருந்து உரிய காலத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவை கொழும்பில் செவிமடுக்கப்படாது 'முதல் முயற்சி'யிலேயே தீவிரம் காட்டப்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

1978 இல் ஆரம்பிக்கப்பட்ட யாழ் மருத்துவ பீடம் குறுகிய காலத்தில் நூற்றுக்கணக்கான வைத்தியர்களை உருவாக்கியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (04)

## பொதுமக்களின் முறைப்பாட்டுக்கு உடனுக்குடன் நடவடிக்கை

சங்கானை பிரதானவீதியில் நேற்று புதன்கிழமையன்று திறந்து வைக்கப்பட்ட தமிழீழ மக்கள் காவல் நிலையத்தில் பொது மக்கள் தங்கள் முறைப்பாடுகளைப் பதிவு செய்துவருகின்றார்கள்.

இக்காவல்நிலையப்பொறுப்பதிகாரியாக சா.க. ரவீந்திரா நியமிக்கப்பட்டுள்ளார் பெண் பொலிஸாரும்கணிசமானளவு இங்கு கடமையாற்றி வருகின்றனர். பொதுமக்களினால் செய்யப்படும் புகார்களுக்கு உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (13)

## சவுதி அபிவிருத்திக்கு இந்தியா தொழில் நுட்ப உதவி

சவுதியில் இந்தியாவின் உதவியுடன் ஐம்பது வகையான அபிவிருத்தித்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் பல வேறு கட்டிடங்கள், பாடசாலைகள், மருத்துவமனைகள் என்பன உருவாக்கப்படவுள்ளன

இந்தியாவிடமிருந்து இதற்கான தொழில்நுட்ப ஒத்துழைப்பையே சவுதி அரசு கோரியுள்ளது. (22)

## ஆசிரியர் கலைவிழா

யாழ் மாவட்டச் சனசமூக நிலையங்களின் சம்மேளனமும், பேரூம் நிறுவனமும் இணைந்து நடாத்தும் பாலர் கல்வி பயிலுநர் ஆசிரியரின் கலைவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் யாழ் மாவட்ட சனசமூக நிலைய சம்மேளனத் தலைவர் இ தவகோபாலின் தலைமையில் நடைபெறும். (16)

## ஓய்வூதியர் நலன்புரிச் சங்க அங்கத்தவர்க்கு புதுவருட முற்பணம்

பண்டத்தரிப்பு ஓய்வூதியம் பெறுவோர் கூட்டுறவு நலன்புரி சங்கம், சங்கத்தில் அங்கத்தவர்களாக இருக்கும் கிறிஸ்தவர்களுக்கு புத்தாண்டு பண்டிகை முற்பணமாக தலா 500 ரூபாவை வழங்கியுள்ளது.

டிசம்பர் மாத ஓய்வூதியப் பணம் இதுவரை கிடைக்காமலிருப்பதனை முன்னிட்டே இவர்களின் புத்தாண்டு செலவுகளுக்காக இந்த முற்பணம் வழங்கப்பட்டுள்ளது. (13)

## ஆறாவது 'சாவ்' போட்டி நேபாளத்தில் நடைபெறும்!

அடுத்த, ஆறாவது 'சாவ்' விளையாட்டுப் போட்டி நேபாளத்தில் நடைபெறவுள்ளது

கொழும்பில் நடைபெற்ற ஐந்தாவது 'சாவ்' போட்டியின் இறுதிநாள் பரிசளிப்பின் போது அடுத்த போட்டி நேபாளத்தில் நடைபெறவுள்ளமைபற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

## விறகுப் பாவனையைக் குறைக்க இரட்டைச் சூட்டடுப்பு அறிமுகம்

சமையல் செய்வதற்கு இரட்டைச் சூட்டடுப்பை உபயோகப்படுத்துவதன் மூலம் விறகுப் பாவனையை 35 சதவிகிதத்தால் குறைத்துக் கொள்ளலாம் தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட இவ் இரட்டைச் சூட்டடுப்புக்கள் இவ்வாறு விறகுப்பாவனையைக் குறைப்பதற்கு உதவுகின்றன யாழ் குடாநாட்டின் விறகுத் தேவைக்காக யாழ்மாவட்டத்திற்கு வெளியில் இருந்தே பெரும் பங்கு விறகு கொண்டு... அதிகரித்துள்ளது. இந்நிலைமையைச் சமாளிப்பதற்கு இரட்டைச் சூட்டடுப்பை பயன்படுத்த விரும்புவோர் திருநெல்வேலியில் உள்ள தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் சக்திப்பிரிவோடு தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது

## போதைவஸ்து பரிசோதனை

சாவ் விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றிய முன்னணி விளையாட்டு வீரர்களும், வேறு சில போட்டியாளர்களும் போதைவஸ்துப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சர்வதேச விளையாட்டு...

## ஜமரையா போட்டிகள்

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடாத்தும் அமரர் ஜமரையா ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டியின் ஓர் அங்கமாக அண்மையில் இடம் பெற்ற ஆரம்பப் போட்டியில் பாசையூர் சென் அந்தனீஸ்...

## மூன்று புதிய பஸ்கள்

அக்கரைப்பற்று டிப்போவுக்குப் புதிதாக மூன்று புதிய...

# தமிழகத்தில் திராவிடமும், தேசியமும் தேய்கின்றன

— எஸ். ஜி. எம்.

காவிரி நீர் பகிர்வு தொடர்பான நடுவர் மன்றத் தீர்வுக்கு எதிராக கன்னடத்தில் நடந்த வன்முறைகளைக் கண்டித்தும், பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நட்டஈடு வழங்கக் கோரியும் நேற்று தமிழகத்தில் பொதுவேலை நிறுத்தமொன்றைத் தமிழக அரசும் ஏனைய கட்சிகளும் நடாத்தியுள்ளன.

இப் பொதுவேலை நிறுத்தத்தை நிறுத்துமாறு கன்னட விவசாய அமைச்சர் தமிழக முதல்வரைக் கேட்டுக் கொண்டார்.

இந்த நேரம் தமிழகத்தில் உள்ள கன்னடக் காரர்களைக் காப்பாற்ற மத்திய அரசு இராணுவத்தை தமிழகத்துக்கு அனுப்ப வேண்டுமெனவும் கன்னடத்தார் கோரியுள்ளனர்.

ஆக இராணுவத்தை இரு மாநிலங்களுக்கும் அனுப்ப வேண்டுமென இருமாநிலத்தினருமே மாறிமாறிக் கோரியுள்ளனர் இது இந்த இரண்டு அண்டை மாநிலங்களின் உறவு நிலையில் விரிசல் ஏற்பட்டுள்ளமையைத் தெளிவாகக் காட்டுகிறது.

இத்துடன் தேசிய ஒருமைப்பாட்டுக் கூட்டத்தில் கன்னட நிலையைத் தமிழக நிலையுடன் ஒப்பிட்டுத் தீர்மானம் எடுத்ததைத் தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியே கண்டித்திருக்கிறார்.

இவை இப்படியிருக்க, திராவிட இயக்கம் என்றால் ஐயர்களுக்கும், ஐயங்கார்களுக்கும் எதிரானது என்ற கருத்து நிலவி வந்ததும் உண்டு; அது பார்ப்பனியத்திற்கு எதிரானது எனக் கருதியதுமுண்டு. அதிலும் திராவிடர் கழகத்தினர் இந்த விடயத்தில் கடுமையாக இருந்திருக்கின்றனர். இப்பொழுதும் கூட கலைஞர் கருணாநிதி பார்ப்பனியத்தில் தான் தனது அரசியல் மீட்சியை ஆரம்பித்துள்ளார்.

ஆனால் நிலைமை இப்போது மாறிவருவதை அண்மைய செய்திகள் நிரூபிக்கின்றன.

சென்னையில் நடைபெற்ற திராவிடர் கழகப் பொதுக் கூட்டத்தில் பேசிய பெண் பேச்சாளர் ஒருவர்:

"தமிழ் நாட்டுக்கு வெளியே தமிழனுக்குப் பாதுகாப்பு இல்லையெனில் (இந்திய) "தேசிய" த்தினால் என்ன பயன்?"

"வெளிநாடுகளில் உள்ள தமிழர்களின் உரிமைப் போராட்டங்களுக்கு இங்கே உள்ள தமிழர்கள் ஆதரவு தர முடியாத தேசியத்தினால் என்ன பயன்?"

"தமிழன் சக்தி வாய்ந்தவனாகவும், உரிமையை நிலைநாட்டுபவனாகவும் இருந்தால்தான் மதிக்கப்படுவான். நீங்கள் தீவிரவாதிகளாகவும், பயங்கர வாதிகளாகவும் மாற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

"தமிழ்நாட்டுத் தமிழர்களின் நலன் கருதி அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரிப்பதுடன் அதன் தலைவர் பிரபாகரனை முழுத் தமிழ் இனத்தின் தலைவராகப் போற்ற வேண்டும்."

"நாங்கள் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாகவோ, அதி தீவிர போக்குடையவர்களாகவோ பார்க்கவில்லை, அவர்களைத் தியாகிகளாகவே பார்க்கிறோம்."

என்று பேசியுள்ளது மட்டுமின்றித் தமிழர்களின் தலைக்கு மேல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்படுத்தியதற்கு ராஜீவ் காந்தியையும் கண்டித்துள்ளார்.

"பிரபாகரன் தமிழர் தலைவர்" என்ற கோசத்துடனேயே கூட்டம் முடிவுற்றுள்ளது.

மேலே குறிப்பிட்டவை கொழும்பிலிருந்து வெளிவரும் ஓர் ஆங்கில வாராந்தப் பத்திரிகையிலிருந்தே எடுக்கப்பட்டவை,

திராவிடர் கழகமும் அதன் கருத்தும் சிறிதாகச் சிலராக் கருதப்படலாம்.

ஆனால் கர்நாடக காவிரி நீர்ப் பிரச்சினையின் பின்னணியில் அது காத்திரமானதாக மாறவே செய்யும். பிரிவினைக் குரல் மீண்டும் ஒலிக்க ஆரம்பிக்கின்றது தெரிகிறது,

கர்நாடகத்தில் தமிழர்கள் தாக்கப்பட்டமைக்கு காவிரி நீர்ப் பிரச்சினை மட்டும் காரணமல்ல. வேறு பல காரணங்களும் உண்டு என வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார்...

வைத்துப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பின்பற்றும் நடைமுறைகளுக்கமையவே இச்சோதனை செய்யப்பட்டதாக சாவ் விளையாட்டு அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

பதற்கு உதவுகின்றன யாழ்ப்பாண நாட்டின் விறகுத் தேவைக்காக யாழ்மாவட்டத்திற்கு வெளியில் இருந்தே பெரும் பங்கு விறகு கொண்டு வரப்பட்டது.

தற்போது போக்குவரத்துப் பாதை தடைப்பட்டுள்ளதால் விறகுக்குப் பெருந் தட்டுப்பாடு நிலவுவதுடன் விறகின் விலையும் வெகுவாக

## மண்ணெண்ணெய் அங்கேயும் இங்கேயும்

ரேஷன் கடையில் இருவர்:-

''எங்கேயும் மண்ணெண்ணெய் கிடைக்கலை... ஐந்து லீட்டர் மண்ணெண்ணெய் வேணும்!''

''கொஞ்ச நேரம் பொறுத்து, கூட்டம் இல்லாதப்போ கடைக்கு வாங்க!''

''யே வ்! நான் கேட்டது சாராயம் இல்லை, மண்ணெண்ணெய்... புரிகிறதா?''

''அண்ணே! சாராயம் வேணுமனா எதிர்த்தாப்பல விற்குது வாங்கிக்கலாம். ஆனாக், நாலு பேருக்கு எதிர்ல உங்களுக்கு மட்டும் கார்டு இல்லாம மண்ணெண்ணெய் கொடுத்தா என்னை 'சூப்' வெச்சிடுவாங்க.''

நன்றி — 'ஜூனியர் விகடன்'

## மூன்று புதிய பஸ்கள்

அக்கரைப்பற்று டிப்போவுக்குப் புதிதாக மூன்று புதிய பஸ் வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

இத்துடன் உதிரிப்பாகங்களும் அந்த டிப்போவுக்கு வழங்கப்படவுள்ளன.

## வாராந்தக் கருத்தரங்கு

விடுதலைப் புலிகள் கலை' பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெறும் வாராந்தக் கருத்தரங்கு 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொண்டாவிலிலுள்ள கலை, பண்பாட்டுக் கழகத் தலைமைச் செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்

இவ் வார அமர்வில் க. சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்கள் ''எனது எழுத்துலக அனுபவங்கள்'' என்ற பொருளில் கருத்துரையாற்றுவார். அனைவரும் தவறாது பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

கார்த்த உதைபந்தாட்டப் போட்டியின் ஓர் அங்கமாக அண்மையில் இடம் பெற்ற ஆரம்பப் போட்டியில் பாசையூர் சென் அந்தனீஸ் அணி அதனை எதிர்த்து ஆடிய வைக்கிங்ஸ் அணியை 6:2 என்ற கோல்கள் கணக்கில் இலகுவாகத் தோற்கடித்தது.

சென் அந்தனீஸ் அணி பெற்ற 6 கோல்களில் நான்கு வீரன் எஸ். றோய் பெற்றுக் கொடுத்தவை என்பதும், வீரன் கிளிபேட் அந்தனிப்பிள்ளை வெகு திறம்பட ஆடி எதிர் அணியினர் முன்னேற விடாமல் தடுத்து ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

இரண்டாவது போட்டியில் குருநகர் பாடுமீன் அணி அதனை எதிர்த்து மோதிய இறீன்பீல்ட் அணியைச் சுலபமாக 7:1 என்ற கோல்கள் கணக்கில் வென்றது. இப் போட்டிக்கு நடுவர்களாக திரு. எம். அருள்பிரகாசம் ஜி எம் செபஸ்தியாம்பிள்ளை கபரின் டீ. ஏ. எம், குணசிங்கம் ஆகியோர் கடமையாற்றினார்கள். (16)

யின் அது காத்திரமானதாக மாறவே செய்யும். பிரிவினைக் குரல் மீண்டும் ஒலிக்க ஆரம்பிக்கின்றது தெரிகிறது,

கர்நாடகத்தில் தமிழர்கள் தாக்கப்பட்டமைக்கு காவிரி நீர்ப் பிரச்சினை மட்டும் காரணமல்ல. வேறு பல காரணங்களும் உண்டு என வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார்.

இவையெல்லாம் இந்தியத் தேசியம், திராவிடம் என்னும் சுலோகங்களுக்கு அப்பால் தமிழினம் என்ற உணர்வும், ஒற்றுமையும் ஏற்பட வேண்டியதையே வலியுறுத்தி நிற்கின்றன.

இந்த இந்தியத் தேசியம் இந்தியாவிலேயே எவ்வளவு காலம் பேசப்படும் என்பது கேள்விக்குறியாக மாறி விட்டது. நெல்லிக்காய் மூட்டை போன்று பெரிய சோவியத் கூட்டமைப்பு வல்லரசே இல்லாமல் போய் வரலாறு மட்டும் ஆகிவிட்ட நிலை இந்தியாவுக்கு பின்வருவதை முன்காட்டுவதாக அமையாதா என்ன,?

தமது மாநிலங்களே நாளைக்கு ஆகும் ஆபத்து இருக்கையில்,

''ஒரு நியாயமான ஆளும் கட்சி என்று சொல்லிப் பிரேமதாசா வடக்குக் கிழக்குப் பகுதிகளைப் புலிகளிடம் ஒப்படைப்பதனால் எழும் விளைவுகள் 'சௌத் பிளாக்கிலுள்ள' யாருக்காவது புரிகிறதா? உங்களுடைய பாதுகாப்பையும், தமிழகத்தின் எதிர்காலத்தையும் இது எப்படியெல்லாம் பாதிக்கும்'' என்று ஆளும் கட்சி அதிருப்தியாளர்கள் கேட்டுத் தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை நேரடியாகவும், மறைமுகமாகவும் நசுக்க முனைகின்றனர்.

இதெல்லாம் தமிழகத்தில் எடுபடாத நிலை உருவாக வேண்டும், வடக்கை நோக்கித் தொழும் நிலையிலிருந்து விடுபட வேண்டும். உலகத் தமிழினத்திற்கு மையத் தாயகமாக அது மிளிர வேண்டும்.

தமிழகத்துத் தமிழர்கள் தமிழர்களாகச் சுதந்திரமாக வாழ்வதற்கும் போராடுவதற்கான சூழ்நிலை உருவாகி விட்டதையே இப்போதைய நிகழ்வுகள் காட்டுகின்றன.

யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்
இலங்கை

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992. 01 10 ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

பதவி: தாதி (அமய/ஒப்பந்த)

சம்பளம்: அமய நியமனம் - 83 ரூபா 40 சதம் (ஒரு நாளுக்கு) அத்துடன் பல்கலைக் கழகத்தினால் செலுத்தப்படும் இதர படிகளும்.
ஒப்பந்த நியமனம் - 2, 085 ரூபா (மாதமொன்றுக்கு)

தகைமைகள்: 1. மூன்று பாடங்களில் திறமைச்சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி.
2. இலங்கை மருத்துவப் பேரவையினால் தாதியாக அங்கீகரிக்கப்பட்டதற்கான தகுதிச் சான்றிதழ்.

வயது: 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

குறிப்பு: ஒப்பந்த அடிப்படையில் மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர்க்கு வயதெல்லை ஏற்புடையதாகாது.

விண்ணப்பங்கள் இப்பல்கலைக்கழக தாபனக் கிளையின் உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் செய்யப்படல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களைப் பெற விரும்புவோர் சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23×10 ச. மீற்றர் அளவுடைய தபால் உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் செய்யப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்

# பல்கலைக்கழகக் காணியில் பாது. அமைச்சுக்கு சமையலறை

கொழும்பு பல்கலைக்கழகத்துக்குரிய காணியின் ஒரு பகுதியைப் பாதுகாப்பு அமைச்சு சுவீகரிக்க எடுத்த முயற்சி தோல்வியுற்றது.

இந்தக் காணியில் சமையலறையையும், சாப்பாட்டறையையும் கட்டுவதற்கு உடன் தேவைப்படுவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் சிறில் ரணதுங்க உபவேந்தருக்குக் கூறியதுடன் அடுத்த நாளே அக்காணியைப் பொறுப்பேற்க நடவடிக்கை எடுத்தார்.

இச்செய்தி அறிந்த மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்தது மட்டுமின்றி அக் காணிக்குள் யாரும் போக முடியாத வண்ணம் முட்கம்பி வேலியையும் நிறுவினர்.

மாணவர்களின் எதிர்ப்பு வலுவடையவே பாதுகாப்பு அமைச்சு தன் முயற்சியைக் கைவிட நேர்ந்தது.

அங்கு இடம்பெற இருந்த சாவ் விளையாட்டுப் போட்டிகளின் குத்துச் சண்டை நிகழ்ச்சியும் வேறு இடத்திற்கு மாற்றவேண்டி ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

கொழும்பு பல்கலைக்கழக விளையாட்டரங்கு சாவ் விளையாட்டுப் போட்டிக்கென இரண்டு மில்லியன் ரூபா செலவில் புதுப்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

★ வர்த்தக திணைக்கள வர்த்தக நிலையங்களில்

# மாணவருக்கு நியாய விலையில் கொப்பிகள் கிடைக்க ஏற்பாடு

யாழ் மாவட்டப் பாடசாலைப் பிள்ளைகளுக்குரிய கொப்பிகள் நியாய விலையில் கிடைக்க வர்த்தக திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சாவகச்சேரி, சுன்னாகம், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சுண்டுக்குளி ஆகிய பகுதிகளில் உள்ள வர்த்தக திணைக்கள விற்பனை நிலையங்களில் கொப்பிகள் விற்பனை செய்யப்படவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வார இறுதியில் சனி, ஞாயிறு தினங்களில் இந்த விற்பனை நிலையங்கள் திறந்திருக்கும் என விற்பனைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாடசாலைகளில் முதலாம் தவணை ஆரம்பமாக இருப்பதால் மாணவர்களுக்கு பெருமளவு கொப்பிகள் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 25

## உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் பொருள்களை இறக்கியது

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலிலிருந்து பொருள்களை இறக்குவதற்கு பொறுப்பாக இருக்கும் உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் இதுவரை 32 கப்பல்களிலிருந்து பொருள்களை இறக்கியுள்ளது.

உணவுக் கப்பல்கள் பருத்தித்துறைக்கு வரத்தொடங்கியதும், முதலில் பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம் இறக்கும் வேலைகளை பொறுப்பேற்றிருந்தது.

இச்சங்கம் 16 கப்பல்களிலிருந்து பொருள்களை இறக்கியிருந்தது.

தனைத் தொடர்ந்து கப்பலிலிருந்து பொருள்களை இறக்கும் பொறுப்பை உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் ஏற்றுக்கொண்டது. 10

## இசை ஆராதனை

அகில இலங்கை கம்பன் கழகத்தினர் 12-1-92 ஞாயிற்றுக்கிழமை தியாகராஜ சுவாமிகள் இசை ஆராதனை விழா நடாத்தவுள்ளார்கள். இந்த இசை ஆராதனை விழாவில் பஞ்சரத்தின கீர்த்தனைகளைப் பாடும் நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளன.

இதற்கான ஒத்திகை 5-1-92 ஞாயிறு காலை 9 மணிக்கு கம்பன் கோட்டத்தில் நடைபெறும் என கழகச் செயலாளர் தெரிவித்தார்.

## வாசகப் பெருமக்களே!

தரமான செய்திகளையும், தெளிவான கருத்துக்களையும், முறையாகத் தந்திடும் உங்கள் முரசொலி

உங்கள் சிந்தனைக்கு உகந்ததாய் வெளிவர உங்கள் கருத்தறிய உங்களை நாம் நாடுகின்றோம்! முரசொலியில் வெளிவரும் செய்திகள், கட்டுரைகள், விமர்சனங்கள் என்பன பற்றிய உங்கள் கருத்துக்களையும், தேவைகளையும், ரசனைகளையும் அறிந்து அவற்றிற்கமைய முரசொலியை உங்கள் கைகளில் சமர்ப்பிக்க விரும்புகின்றோம்.

இதன்படி ஒவ்வொரு மாத முடிவிலும் அம்மாத முரசொலி பற்றிய அபிப்பிராயங்களை எழுதி அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன்பதாக எமது விநியோகமுகவரிடம் கையளிக்குமாறு வாசகர்களை வேண்டிக்கொள்கின்றோம். மார்கழி மாத முரசொலி பற்றிய உங்கள் அபிப்பிராயங்களை தை மாதம் 10 ஆம் திகதிக்குமுன் அனுப்பிவைக்கவும்

தரமானதென நாம் கணிக்கும் முதலாவது கருத்துக் கணிப்பிற்கு ஒரு மாதத்திற்கும்

இரண்டாவது கருத்துக் கணிப்பிற்கு இருபது நாள்களுக்கும்.

மூன்றாவது கருத்துக் கணிப்பிற்கு பத்து நாள்களுக்கும் இலவசமாக முரசொலி வழங்கப்படும்.

— நிர்வாகம்

# புத்தளம் ஊர்காவற்படையை நிர்வகிப்பது பொலிஸா, இராணுவமா என்று குழப்பம்!

புத்தளம் மாவட்டத்தில் உள்ள ஊர்காவற்படையினரால் பலவிதமான பிரச்சினைகள் ஏற்பட்டு வருவதாக அம்மாவட்ட மக்கள் மாகாண உள்விவகார அமைச்சர் பெண்டபெரேரா விடம் முறையிட்டுள்ளனர்.

இம் மாவட்டத்தில் உள்ள சுமார் 200 ஊர்காவற்படையினரில் புத்தளம் ஏ. எஸ். பி யின் கீழ் ஒரு தொகுதி ஊர்காவற்படையினரும் மற்றுமோர் தொகுதியினர் விசேட இராணுவத்தின் கீழும் பணிபுரிகின்றனர்.

இதனால் இப்படையினரின் நிர்வாகம் சீரற்று இருப்பதால் அவர்களால் பல தொல்லைகளும் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மாவட்ட ஊர்காவற்படையினர் அனைவரையும் இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருமாறு இப்பகுதி கிராமசேவகர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

எனினும் தொடர்ந்தும் புத்தளம் ஊர்காவற்படையினரால் பல பிரச்சினைகள் தற்போதும் இருப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

பொலிஸ்...

டிக் வைத்து சுட்டுக் கொலை செய்ததாகப் புலன் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

அப்பெண்ணைச் சுட்டுக் கொன்ற பின்பு டயரினால் உடல் எரிக்கப்பட்டதாம்.

சந்திராவதியைக் கடத்திச் செல்வதற்குப் பொலிஸ் ஜீப் பாவிக்கப்பட்டதாகவும் அதனை ஓட்டிய டிரைவர் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

சந்திராவதியின் கொலையைத் தொடர்ந்து மேலும் நாலு பெண்களை அதே முறையில் கொன்றதாகவும்

## பாண் தயாரிப்பதற்கான மூலப் பொருள்கள் வந்தன

பாண், பணிஸ், பிஸ்கட், கேக் தயாரிப்பதற்குத் தேவையான மா, சீனி, தவிர்ந்த ஏனைய மூலப் பொருள்களை யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் கொண்டு வந்து சேர்த்துள்ளனர்.

ஹைஸ்கோ, மாஜரீன், ஈஸ்ட் போன்ற மூலப் பொருள்களே இவ்வாறு கொண்டுவரப்பட்டுள்ளன,

இவை கொண்டு வரப்பட்டதன் மூலம் பாண், பணிஸ், பிஸ்கட், கேக் தயாரிக்க வேண்டிய கஷ்டங்கள் நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தேயிலை ஏற்றுமதி வீழ்ச்சி

# கல்விகற்பிக்க வேண்டிய நேரத்தில் தேவையற்ற விழாக்கள்

நாட்டின் 90 சதவீதமான பாடசாலைகளில் சென்ற ஆண்டுக்குரிய பாடத்திட்டங்கள் முழுமையாக மாணவர்களுக்குக் கற்பித்து முடிக்கப்படவில்லையென ஆய்வறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையில் பாடங்கள் கற்பிக்கும் நேரங்களில் அநேக பாடசாலைகள் தேவையற்ற விழாக்களை நடாத்தி நேரத்தை விரயம் செய்வதாகக் குறிப்பிட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு விடுமுறை வழங்கும் முறைகளும் திருப்திகரமாக இல்லையென அந்த அறிக்கை மேலும் குறிப்பிட்டுள்ளது.

## முகாம் திரும்பாதவர்களுக்கு...

வடமராட்சி கிழக்கு பகுதிகளிலிருந்து இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள

படுகிறது.

முகாம்களுக்குத் திரும்பாத இடம்பெயர்ந்தவர்களுக்கான இலவச நிவாரணம் பெறும் அட்டை

அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் செய்யப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்

அரசாங்கத்திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியனவற்றைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் தேதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் விவரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்காத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
யாழ்ப்பாணம்.
1992 - 01 - 02. 01003

சந்திராவதியின் கொலையைத் தொடர்ந்து மேலும் நாலு பெண்களை அதே முறையில் கொன்றதாகவும் இரகசியப் பொலிஸார் மற்றக் கொலைகள் பற்றிப் புலன் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

தொற்றுநோய்...
முகாம் சுற்றாடலிலேயே புதைக்கப்பட்டன

தற்போது இம்முகாமில் உள்ள 28 ஆயிரம் பேரினதும் சுகாதார நிலை மோசமானதாக உள்ளது.

பாடசாலைகளில்...
சாலைகளில் வைத்தே வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேரம் மன்னார் மாவட்டத்தில் சில பாடசாலைகளில் இராணுவம் நிலை கொண்டிருப்பதாகவும், இவர்களை அங்கிருந்து அகற்றுமாறு கல்விப் பகுதியினர் சம்பந்தப்பட்டவர்களுக்கு விண்ணப்பித்தும் இன்னமும் சாதகமான பதில் வரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# தேயிலை ஏற்றுமதி வீழ்ச்சி அமைச்சு மத்தியகிழக்குக்கு விஜயம்

கடந்த வாரங்களில் கொழும்பு ஏல விற்பனையில் தேயிலையின் விலையில் அதிக வீழ்ச்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து பெருந்தோட்டத் தொழிற்துறையமைச்சர் ரூபா கருணாரட்ண அவசர விஜயம் ஒன்றை மேற்கொண்டு மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றுள்ளார்.

ஈரான், எகிப்து, மோரிடான் போன்ற நாடுகள் இலங்கையிடமிருந்து அதிக அளவு தேயிலையை வாங்குவது தொடர்பாக அமைச்சர்பேச்சு நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி கிழக்கு பகுதிகளிலிருந்து இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அகதிகள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட முகாம்களுக்கு திரும்புவதாக தெரிவிக்கப்படுகிறது.

முகாம்களுக்குத்திரும்பாத இடம்பெயர்ந்தவர்களுக்கான இலவச நிவாரணம் பெறும் அட்டைகள் ரத்துச் செய்யப்படுமென வும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

(08)

பேனை...
தாக்கக்கூடிய இத்துப்பாக்கி பேனை போன்றே இத்துப்பாக்கியையும் உடைவில் கொழுவலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரச...
வீடுகளைத் திருத்தவும் காணிகளை வாங்கவும் இந்த முற்பணம் பயன்படுத்தலாம் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளை

## உள்ளூர் உற்பத்தி அமுலாக்கும் உத்தியோகத்தர்

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான அனுபவம், ஆற்றல், கல்வித்தகைமை உள்ளோர் 10 01. 1992 க்கு முன்பதாக விண்ணப்பிக்கவும். நேர்முகப் பரீட்சை13, 01. 92 முற்பகல் 10 00 மணிக்கு எமது பணிமனையில் நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
02. 01. 92.

ச. சிவானந்தராசா.
கௌரவ செயலாளர்.
01006

## நல்லூர் ப. நோ. கூ. சங்கம் நெல் அரிசியாக்குவதற்கான கேள்வி கோரல்

எமது சங்கத்தால் வழங்கப்படும் நெல்லை அரிசியாக்கி வழங்குவதற்கான கேள்விகள் ஆலை உரிமையாளரிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி -8. 1. 92,

பொதுமுகாமையாளர்.
01005 நல்லூர் ப. நோ. கூ. சங்கம்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 03' 01' 199. இல் அச்சிட்டுவெளிவிடப்பெற்றது